மிக அவசரம் :

இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர் :

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை-34.

பெறுநர் :

1. அனைத்து இணை ஆணையர்கள்,
2. அனைத்து இணை ஆணையர் / செயல் அலுவலர்கள்,
3. அனைத்து துணை ஆணையர் / செயல் அலுவலர்கள்,
4. அனைத்து உதவி ஆணையர் / செயல் அலுவலர்கள்,
5. அனைத்து உதவி ஆணையர்கள்.

<u>சுற்றறிக்கை ந.க.எண். 53836 /2021 எம்3 நாள் 12.10.2021</u>

அய்யா / அம்மையீர்,

பொருள்: மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண். 13494/2021 உத்தரவு நாள் 30.06.2021- நீதிமன்ற உத்தரவினை நிறைவேற்றுதல் குறித்து தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 23.08.2021 நடைபெற்ற கூட்ட நடவடிக்கை முடிவுகளை பின்பற்றி செயல்படுத்திட அறிவுரை வழங்குதல்-தொடர்பாக

பார்வை : அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அ.நி.5.2)துறை கடிதம் எண்.5632/அ.நி.5.2/2021-7 நாள் 13.09.2021

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண். 13494/21 வழக்கானது, நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் அகரம் கிராமம், அருள்மிகு காசிவிஸ்வேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிப்பு தொடர்பாக 09.06.2021 அன்று திரு.அ.இராதாகிருஷ்ணன் என்பவரால் அளிக்கப்பட்ட மனு மீது நடவடிக்கை எடுக்கக் கேட்டு மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 30.06.2021 அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மேற்கண்ட வழக்கில் வழங்கப்பட்ட உத்தரவின்படி திருக்கோயில் நிலங்களை பாதுகாப்பது குறித்து பயனளிக்கும் வகையில் நுட்பமான முடிவினை மேற்கொள்ளுதல் தொடர்பாக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில், வருவாய்த்துறை அரசு செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையர், பதிவுத்துறை

Verified@RealEstate™

தலைவர், தமிழ்நாடு காவல்துறை தலைவர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை, பஞ்சாயத்ராஜ் மற்றும் ஊரகவளர்ச்சித்துறை, தமிழ்நாடு மின்வாரிய தலைமை அலுவலர் ஆகியோருடன் 23.08.2021 கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்ட நடவடிக்கை குறிப்பானது பார்வையில் கண்ட அரசு கடிதத்துடன் இணைத்து இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை 13494/2021 வழக்கில் உத்தரவிட்டபடியும் மற்றும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 23.08.2021 அன்று நடைபெற்ற கூட்ட நடவடிக்கை முடிவுகளை பின்பற்றி செயல்படுத்திடுமாறு இத்துறை அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படியும் 23.08.2021 கூட்ட நடவடிக்கை முடிவுகளை தவறாமல் பின்பற்றி செயல்-படுத்தாமல் அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களில் இழப்பு ஏதும் ஏற்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிர்வாகி / செயல் அலுவலர்கள் பொறுப்பாக்கப்படுவார்கள் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இச்சுற்றறிக்கை விவரத்தை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து அறநிறுவனங்களின் நிர்வாகிகள் / செயல் அலுவலர்களுக்கு தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இச்சுற்றறிக்-கையினை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

12.10.2021
கண்காணிப்பாளர்
3/4

இணைப்பு-
பார்வை 1-ல் கண்ட அரசு கடித விவரம்

12.10.2021

நகல் –

இவ்வலுவலக எம்2 பிரிவு/
எண்ணிடல் மூலம் – தொடர் நடவடிக்கைக்காக

Verified @ RealEstate

தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 23.8.2021 அன்று, தலைமைச் செயலாளர் கூட்டரங்கில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை குறிப்பு

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை எண்.13494/2021-ன் மீதான 30.6.2021 மற்றும் 06.7.2021 நாளிட்ட உத்தரவினைச் செயல்படுத்துவது தொடர்பாக தலைமைச் செயலாளர் அவர்களது தலைமையில் 23.8.2021 அன்று மாலை 4.00 மணிக்கு தலைமைச் செயலாளரது கூட்ட அரங்கில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறித்த பட்டியல் இணைப்பில் உள்ளது.

தலைமைச் செயலாளர் அவர்கள், நீதிப்பேராணை எண்.13494/2021-ன் மீது மாண்பமை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், இந்து சமய அறநிலையத்துறையின் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்டறிந்து, அந்நிலங்களை சட்டத்திற்குப் புறம்பாக ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி அந்நிலங்களை மீட்டெடுப்பது தொடர்பாகவும், இனி வருங்காலங்களில், புதிதாக ஆக்கிரமிப்புதாரர்களால் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வதிலிருந்து தடுப்பது குறித்தும் அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்ட கூட்டத்தில், நீதிப்பேராணை மனுதாரர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் அவர்கள் திருக்கோயில் சொத்துக்களைப் பாதுகாக்க, திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு ஒவ்வொரு புல எண். வாரியாகவும், இனாம் தூய பதிவேடு, பகிர்மானப் பதிவேடு மற்றும் நிலவரித் திட்ட ஆவணங்கள் உட்பட அனைத்து வருவாய்த் துறை ஆவணங்களையும், மின்னணுவாக்கம் செய்ய வேண்டும் என்றும், தொடர்புடைய மாநகராட்சி / நகராட்சிகள் /பேரூராட்சிகள், ஊராட்சிகள் வாரியாக, கட்டுமானங்களுக்கான அனுமதி பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள், சொத்துவரி செலுத்துவதற்கான ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றை திருக்கோயில் நிர்வாகங்களுக்கு வழங்குவதன் மூலம் முறைகேடான இணைப்புகள் வழங்குவதைத் தவிர்க்கமுடியும் என்றும், தமிழகத்திலுள்ள அனைத்து திருக்கோயில்களுக்கும் சொந்தமான சொத்துக்களுக்கு

Verified RealEstate

திருக்கோயில் பெயரில் மட்டுமே மின் இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தலைமைச் செயலாளர் அவர்கள் துறை வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பின்வருமாறு அறிவுறுத்தியுள்ளார்கள்:-

வருவாய்த்துறை

i. திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு என்பதையும், அதனை அளவீடு செய்வதற்கும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் நில நிர்வாக ஆணையரகத்துடன் இணைந்து ஆவணங்களுடன் சரிபார்க்கப்பட வேண்டும்.

ii. தனி நபர் பெயரில் பட்டா வழங்குவதை தவிர்த்தல் வேண்டும். மேலும், நில நிர்வாக ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்கள் உதவியுடன் வருவாய்த் துறையும், இந்து சமய அறநிலையத்துறையும் இணைந்து, திருக்கோயில் நிலத்தினை வருவாய்த் துறை ஆவணங்களுடன் ஒப்புநோக்கி, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்களை கண்டறிந்து ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்கு அறிவியல் பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

iii. திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையா சொத்துக்கள் தனி நபர் பெயரில் தவறுதலாக பட்டா மாற்றம் செய்யப்பட்ட இனங்கள் இவற்றை கண்டறிந்து அவற்றை திருக்கோயில் பெயரில் மாற்றம் செய்தல் வேண்டும்.

iv. வருவாய்த் துறையில் நடைபெறும் வருடாந்திர ஜமாபந்தியில் திருக்கோயில் நிலங்கள் யாவும் கள ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும், மேலும், அத்தகைய நிலங்களில் ஆக்கிரமிப்பு குறித்த விவரங்களைப் பட்டியலிடுதல் வேண்டும்.

பதிவுத்துறை

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் உறுதி செய்யப்பட்டவாறு, ஏற்கனவே வழங்கப்பட்ட சுற்றறிக்கையின்படி பதிவுத்துறை சட்டம் 22ஏ-ஐ பின்பற்றி, திருக்கோயில் சொத்துக்களை சட்டவிரோதமாக பரிவர்த்தனை செய்வதை தடுத்திட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Verified RealEstate™

- **பொதுத்துறை**

மாவட்ட வாரியாக சட்டம் (ம) ஒழுங்கினை பராமரிக்க மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், காவல்துறை, உள்ளாட்சித் துறை, தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மானக் கழகம், பொதுப்பணித்துறை, வனத்துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டத்துறை

திருக்கோயில் நிலங்களில் சட்ட விரோதமான கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதை தடுக்க உள்ளாட்சி நிர்வாகத்தின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை தவிர்ப்பதற்கு, சொத்து வரி மற்றும் வீட்டுவரி ஆகியவற்றிற்கான இரசீதுகளை திருக்கோயில் பெயரில் மட்டுமே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தனி நபர்கள் பெயரில் இரசீது வழங்கக் கூடாது.

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை

குடிநீர் இணைப்பு மற்றும் குடிநீர் வரி கேட்பு ஆகியவை அனைத்து ஆவணங்களும் திருக்கோயில் பெயரில் மட்டுமே வழங்கப்பட வேண்டும், மேலும், தனிநபர் பெயரில் பதிவு செய்வதை தவிர்க்க வேண்டும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) மின் பகிர்மான கழகம்

தனி நபர்களால் மின் இணைப்புக்கு விண்ணப்பிக்கப்படும்போது, அச்சொத்து திருக்கோயிலுக்குச் சொந்தமானதா என்பதை கண்டறிந்து, திருக்கோயில் பெயரில் மட்டுமே மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். ஆக்கிரமிப்பாளர்களின் பெயரில் மின் இணைப்பு பெற முயற்சிப்பதை தடுத்திட வேண்டும்.

Verified @ RealEstate™

மிகப் பெரிய அளவிலான ஆக்கிரமிப்பாளர்களை முதற்கண் அகற்றுவதற்கு மேற்காண் துறைகள் மற்றும் காவல் துறையின் உதவியுடன் அகற்றப்பட வேண்டும். ஏற்கனவே அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் குறித்தும் புதிதாக ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் தடுப்பது குறித்தும் அனைத்து துறை செயலாளர்கள் தங்கள் துறை கட்டுப்பாட்டிலுள்ள தலைமையகம் முதல் அனைத்து சார்நிலை அலுவலகங்கள்/ நிறுவனங்களுக்கும் தெளிவான ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். மேலும், வருவாய்த் துறை மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் இ.ச.அ.நி கொடைகள் சட்டம் 1959, சட்டப்பிரிவு 109-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மனிதவள மேலாண்மைத் துறை

மாவட்டந்தோறும் அலுவலகங்களில் பராமரிக்கப்படும் திருக்கோயில் நிலங்கள் தொடர்பான பதிவேடுகளை முறையான கால இடைவெளியில் ஆய்வு செய்ய வேண்டும்.

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

16/9/2021
பிரிவு அலுவலர்

2/2 16/9/2021

Verified RealEstate